ண்டாம் பதிப்பு.

ஓம்

பூர்வத்தில் காஞ்சிமாநகரத்திலிருந்து
தற்காலம் தஞ்சைமாநகரத்தில் வந்து
எழுந்தருளியிருக்கும்

வன்னியகுல தெய்வமாகிய

ஸ்ரீ சொர்ணகாமாக்ஷியம்மன்

பதிகம்.

இஃது
1889 ஹ கூடலூர் ஜில்லா
சங்கப் பிரதிநிதியும்
உபாக்கிரா சறைதிபதியுமாகிய
பென்ஷன்ட் ஹாஸ்பிடல் அஸிஸ்டாண்டு
வன்னியகுலசேகர

வி. குருசாமி இராயரவர்களால்

இயற்றப்பட்டு
திருக்கோவலூர்
புஷ்பாலயாம்பாள் விலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

1911.

ன் விலை காலணா.

க்ஷத்திரியருதவியால் அச்சிடப்பட்டது.

Q25:417
M4
172473

ஓம்

பதிகச்சிறப்பு.

-+*+-

ஆதியில் சாக்ஷாத் விஷ்ணுஸ்வரூபியாகிய வேதவியாச பகவானுலியற்றிய அஷ்டாதசபுராணங்களிலொன்றாகிய ஆக்நேய புராணத்தினுடைய பூர்வ பாகத்திலுதகரித்திருக்கிறபடி உமாதேவியாகிய சொர்ணகாமாக்ஷியம்மன்றனது வரப்பிரகாசத்தினாலுஞ் சகாயத்தினாலுஞ் சம்புமகாமுனியாகாக்கி மத்தியில் வன்னியகுலோற்பவஞ் செய்வித்தமகிமையையும் ஷை அம்மன் குலதெய்வமாயிருந்து வன்னியமன்னர்களைக்கொண்டு வாதாபி இனதாபி முதலியகொடிய இராக்ஷதரைச்சம்ஹரித்து தேவர்களைக்காத்தபிரதாபத்தையுஞ் சுருக்கமாகக்காட்டி பத்தும் பதிகமுமாக அம்மன் பேரிற் பாடப்பட்டிருக்கிறது. அநுதினம் அல்லது மங்களவார சுக்கிரவார தினங்களில் தப்பாமல் பய பக்தி விசுவாசத்துடன் ஷை சொர்ணகாமாக்ஷியம்மனைப் பூசித்து யிப்பதிகத்தை வாசித்துவருபவரும் வாசிப்பதை சிரத்தாபக்தியுடன் கேட்பவரும் இகத்தில் தாரபுத்திராதிகளுடன் அஷ்டைஸ்வரியங்களை யநுபவித்துப் பரத்தில் சாஸ்விதானந்த மோக்ஷசாம்ராஜ்யத்தை யடைவார்கள்.

சொர்ணகாமாக்ஷியம்மன் துணை.

உ

சென்னை அக்னிவம்சக்ஷத்திரிய மகாசங்கத்தைச்

சேர்ந்த நிஜாம்டுமினியன்

சங்கப்பிரதிநிதியாகிய

டீசன்ஸ் போர்ட்டாபீசு ரயிட்டர் மகா-௱-௱-ஸ்ரீ

கோ. நாராயணசாமி நாயகரவர்களால்

இயற்றிய சாற்றுக்கவி.

இட்டமுட னேபத்தும் பதிகமாக
விலகுசொர்ண காமாட்சி யம்மன்மீது
சட்டமாய்ச் சகலர்க்கு முதவியாகச்
சாற்றினன் குருசாமி ராயன்மேலாய்த்
திட்டமுட னிப்பதிகம் படிப்போர்கேட்போர்
தினமம்ம னைப்பூஜை புரிவோரெல்லாம்
அட்டலட்சுமிநலங் கிடவேவாழ்ந்து
வரியதிரு மோக்ஷவீடடைகுவாரே.

சோர்ண காமாக்ஷியம்மன்

பதிகம்.

காப்பு வெண்பா.

வன்னியர்களென்றென்றும் வாழ்த்திசுகம்பெறவே
யுன்னிசொர்ண காமாக்ஷியுத்தமிமேற், பின்னமறப்
பத்தும்பதிகமும்பாடப் பவமொழிக்குங்
கத்தன்றிருவடியே காப்பு.

ஆசிரிய விருத்தங்கள்.

ஆதிகாலத்திலே வாதாபி இனதாபி
யசுரர்செய் கொடுமையாலே
அந்தணர்களிருடி கட்டேவர்கண் மூவர்கள்
ளரிய ஞானிகளாதியோர்
ஓதுதற்கரிய துன்பக்கடலிலாழ்ந்திய
துணர்ந் திமையகிரிசார்பினில்
ஓுற சம்புமாமுனியினால் வேள்விசெய்வித்து
வோங்கு மக்கினிதேவனைக்
காதலுடனேருத்திர வன்னியனெனப்புகழ்
கனலினின் றவதரிக்கக்
கருணைகூர்ந்திந்திரன் மகளையுங்கூட்டி திரு
கலியாணமும் நடத்திச்
சோதிவடிவான வன்னியராஜனாற்றேவர்
தயர்தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வத்துளமகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ணகாமாக்ஷியுமையே. (1)

அந்தவன்னியராஜனையு மந்திரமாலையையு
மகில தேவருமூவரும்
அன்புடன்வாழ்த்தி ரதகஜதுரக சேனையோ
டரிய வரிசைகளளித்துச்
சொந்தமா யுபசரிக்கச்செய்து மகிமைபெறு
சூலம்வில்வேல் வாளுடன்
சொல்லரிய பலவாயுதங்களை யளித்தவைகட்
சூக்ஷமங்களையு முரைத்து
எந்தசத்துருவையு மரைக்கணத்தினில் வெல்ல
வெழில் வரமளித்திராஜன்
இச்சையின்படி ருத்திரபுரமொன்றைமயனா
லியற்றுவித்தே வன்னியச்

சுந்தரான்றனுசினுலிந்திராதி தேவர்க
டுயர்தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வந்துள மகிழ்ந்துசுதி தந்தருளுஞ்
சொர்ணகா மாட்சியுமையே. (2)

நீலகண்டன் வச்சிரவாகுகங்காபால
னித்ய சாம்பவவிராயன்
நேரான பாசுபதாாயனேடைந்துவன்
னியபாலர்களை யாசனும்
மூலபுருடர்க்களித்தாய் தயித்திய குலமிர்
மூலமாகக்கருதியே
முறைகெட்ட நெறிவிட்ட மூடராக்கதர்செயலை
மூற்றும்விரித் துரைத்து
ஆலமுண்டோன் வரம்பெற்ற வாதாபியின்
னகமதையடக்கவன்றே
னுரு மிரத்தினகா புரஞ்செல்லவேண்டுமென்
றாசனுக் காக்ஞையிட்டுச்
சோலைசூழ் ருத்திரபுரம் விடச்செய்த மார்
துயர் தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வந்துளமகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ணகாமாட்சியுமையே. (3)

மட்டற்றசதுரங்க சேனைகளையுண்டாக்கி
மகிழாசனுக்களித்து
மைந்தர்களுடன் பின்றொடர்ந்து வாவென்னவே
மன்னன்மக்கட் பின்வா
அட்டகாசத்துடன் சதுரங்கபலமிலக
வதிரதர் சமரதர்களோ
டாண்புலிக்கொடி யுர்ந்திட மற்றவிருதுகள்
ளணியாய்ப் பிடித்துவரவே
துட்டராக்கதர் வாழ்ந்திடுந் தீவைநாடியே
துள்ளநற் புரவியேறி

அருசாகபெதன் கடற்கரைவரக்கண்டங்கு
தோ ஹுபாளையமிறக்கி
தொட்டகாரிய மதனை விட்டிடாமற்றேவர்
துயர்தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வந்துளமகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ணகாமாட்சியுமையே. (4)

கடற்கரையினின்று வன்னியர்படைத்தூதி யென
காணயாதவ சிறுமிபொற்
கள்ளவேடப்பூண்டு மோர்க்குடத்தோடியர்
ககனமார்க்கஞ் சென்றமே
அடைவுடன் வரதாபிரகமேகி மோர்விலை
யாயிரம் பொன்னுமுர்மெகன்
றங்கங்குபேரொலியிடக் கேட்டரக்கர்கள்
ளதிசயமிதென்றுவாங்க
திடமாகவிச்சேதி கேட்டவ்வரக்கர்கோன்
சீக்கிரம் வரவழைத்துத்
தீரமுடனின்னகரில் வந்தநீயாரெனத்
தெரிவிக்க சின்மாகியே
துடிக்குப்வாதாபி மாளச்சாபமிட்டமார்
துயர்தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வந்துள மகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ண காமாட்சியுமையே (5)

பமிட்டுத் திருப்பித்தென்கடல் வந்து
சங்கதியறைந்து படைச்
ரத்தின் மேனடப்பித்து வாதாபி
தங்குமா நகரடுத்து
பிகளை நிர்மூலமாக்க வன்னியராஜ
பாலகர்க்காக்ஞையிடவே
பரிந்து மன்னனு மக்களும் படைத்தலைவரும்
பதாதிகளு மார்ப்பரிக்கக்

கோபமாய் வாதாபி சாரணரையேவியிக்
கொடுமை யென்னென வினவக்
கொஞ்சமா யெண்ணிதேவரை யிம்சைசெய்ததார்
கொடுஞ்சமர் புரியவந்தோஞ்
சோபிதமதாய்ச் சமர்க்களம்வருகவென்றோதி
துயர்தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வந்துளமகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ண காமாட்சியுமையே. (6)

வன்னியப் பெருமானிருக்கு மொய்யாரமும்
வகுத்தபடைகளின் சூரமும்
வந்துசாரணரோத வாதாபிகேட்டுதன்
மதிமந்திரிகளை யழைத்து
அன்னியர்கள் கடல்கடந்திந் நகரடுத்துபோர்க்
கழைக்கும் விந்தையிதென்னமோ
வறிந்துரைப்பீரெனக் கொசுக்களீடோ நமக்
கதமாவர் நொடியிலென்றார்
பின்னுமவன் மாமனும்பர்கள்செய்த சூதெனப்
பேசி வன்னியராயனைப்
பிரியமாய் நேசியாவிடினீயு மக்களும்
பிசகாதிறப்பீரெனச்
சொன்னமதி கேளாது வாதாபியால் வந்த
துயர்தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வந்துளமகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ண காமாட்சியுமையே.

கதிரவன்முன் மூடுபனிபோலு மானிடக்
கயவரிவரென மதித்துக்
கடுத்தி ராக்கதர்சேனைகளை சமர்க்கேவினன்
கடல்பொங்கி வந்ததென்ன

பஞ்செட்டு பதிவிட்டு வானவர்களோடபுகழ்
வன்னியர்சடீரமுடனே
பந்தபடைகளை வெல்ல வன்பகழிகட்டந்து
மடியவைத்தாய் நொடியிலே
துகண்டு யச்ஞஜித்தெமஜித்து பரிமுகன்
னரிமுகன்னத்திமுகனே
டானவினதாபியையு மர்புதப்படைகளையு
மமர்கள மனுப்பவவவரைத்
துதிபெறும் வன்னியசாத்திரன் மாய்த்தமரர்
துயர்தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வந்துளமகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ண காமாட்சியுமையே (8)

அரியசுதருந் துணைவனும்மாய்ந்த சேதிகேட்
டடியற்றமரமென்னவீழ்ந்
தடிவயிற்றைப் பிசைந்தலரிப்புரண்டழுது
வாக்ரஷங்கொண்டு பகையை
யொருநொடிக்குட்டீர்ப்பதுண்மையென்றுயிரம்
முரமுளச் சிங்காதமே
லுற்றுவாதாபி போர்க்களமடுக்கக்கண்டு
வுப்பர்கோனி ரதமனுப்பத்
துரிதமாய் வீரவன்னியனந்த ரதமேறி
சூழ்புதல்வரோடுநிற்கத்
ண்டிவாதாபி சிரமறசக்தியாஸ்திரந்
தொடுவென்று மந்திரித்து
நக்காயளித்தன்று சமர்நடபித்தமரர்
துயர்தீர்த்த குலதெய்வமே
ரந்தமென வந்துளமகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ணகாமாட்சியுமையே. (9)

சொல்லரிய மூலபலசேனையொடு வாதாபி
தோன்றிவன்னியபாலரைச்

172473

சூழ்ந்துசா வெய்துசமர் செய்தவரை யேசட்டியே
சுடுகணைதொ டிந்திரஜன்
வல்லமையு மழிகீற னென்றுவிட வேயதை
மார்பதனில வாங்கிமன்னன்
வருத்தமுற் றதிகோப தீப்தனுய்ச் சாமாரி
வருஷித்து சத்தியையெடுத்
தல்லா சமாய்த்தூப தீபங்கொடுத்துவிட்
டொருநொடியில் வாதாபியின்
ஞெளிர்மகுட குண்டலமு டன்சிர மதைத் தணித்
துயர்ந்திடச் செய்யதேவர்
தொல்லைநீங் கியதெனப் புஷ்பவரு ஷம்பொழிய
துயர்தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வந்துள மகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ண காமாட்சியுமையே. (10)

அரக்கர்கோன் பட்டபின் னந்நகரை யோர்சுதர்க்
களித்துமகுடஞ் சூட்டியே
யாளவிட் டமர்களத் துயிர்விட்ட வன்னியர்க
ளனைவரையு மேயெழுப்பி
அரியவன் னியாரயர் கட்குசுர லோகங்க
ளியாவை யுங் காட்டிமீண்டு
ஆனந்த மாகருத் திரபுரஞ் சேர்ப்பித்து
வகிலதே வாசுரர்களும்
ஸ்ரீயமா யடிபணிந்து வாசு புரிவித்து
பின்பாச னலியற்றி
ஸ்ரேயையாய் தந்தபொற் கோயிலில் வசித்துச்சிற்
பின்வருஞ் சந்ததிகளைச்
சுராதிய குறைவின்றி காக்கவா மீந்துபல
துயர்தீர்த்த குலதெய்வமே
சொந்தமென வந்துள மகிழ்ந்துகதி தந்தருளுஞ்
சொர்ணகா மாட்சியுமையே. (11)

PRINTED AT THE

P. V. PRESS TIRUKOVALUR.

அறிவிக்கை.

கூடலூர் புதுப்பாளையத்திலிருக்கும் வன்னிய குல க்ஷத்திரியசங்க ஆபீஸிலாவது பரங்கிப்பேட்டை பென்ஷன் ஹாஸ்பிடல் அஸிஸ்டாண்டு வன்னியகுல சேகர வி. குருசாமி இராயரவர்களிடமாவது அடியிற்கண்ட புத்தகங்கள் வேண்டியவர்கள் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

சொர்ணகாமாக்ஷியம்மன் பதிகம்	0	0	3
சங்கத்தொனி	0	0	3
சங்கக்கனி	0	0	9
சங்கப்பதிகம்	0	0	3
சங்காம்ருதம்	0	1	0
வன்னியகுல வினாவிடை	0	0	9

ஷை புத்தகங்களில் 25 க்கு மேல் வாங்குபவர்கட்கு கமிஷன் கொடுக்கப்படும். விவரம் ஷை விலாசதாரர்கட்கு எழுதி தெரிந்துக்கொள்ளவும்.